# தேவாரத் திருத்தல பூத்தொண்டு அறக்கட்டளை

## திண்டுக்கல்.

தென்னாடுடையசிவனேபோற்றி ! எந்நாட்டவருக்கும்இறைவாபோற்றி!

சிவ
சிவசிவ
சிவசிவசிவ
சிவசிவசிவ
சிவசிவசிவ
சிவசிவசிவ
சிவசிவசிவ
சிவசிவசிவ

நால்வர்துதி

பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர் கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்த பிரான் அடி போற்றி
வாழி திருநாவலூர் வன் தொண்டர் பதம் போற்றி
ஊழி மலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி

விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்துஅடி போற்று கின்றேனே

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

நமப் பார்வதி பதையே... அரகர மகாதேவா..

தென்னாடுடைய சிவனே போற்றி !

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி !

ஏகம்பத்துறை எந்தாய் போற்றி !

பாகம் பெண்ணுரு ஆனாய் போற்றி !

அண்ணாமலை எம் அண்ணா போற்றி !

கண்ணாரமுதக் கடலே போற்றி !

காவாய் கனக திரளே போற்றி !

கயிலை மலையானே போற்றி போற்றி!

## பன்னிரு திருமுறைகள்:

### 1.முதலாம் திருமுறை:

அருளியவர் : திருஞானசம்பந்தர் பண் : நட்டபாடை நாடு :சோழநாடு காவிரி வடகரை தலம் : சீர்காழி - 01-பிரமபுரம்

தோடுடைய செவியன்விடை
யேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசிஎன்
உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந்
தேத்தஅருள் செய்த
பீடுடையபிர மாபுரம்மேவிய
பெம்மானிவ னன்றே.1

### 2. இரண்டாம் திருமுறை:

அருளியவர் : திருஞானசம்பந்தர் பண் :பியந்தைக்காந்தாரம் நாடு :பொது தலம் :பொது

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி
சனிபாம்பி ரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 1

## 3.மூன்றாம்-திருமுறை:

அருளியவர் : திருஞானசம்பந்தர் பண் : கௌசிகம் நாடு :பொது தலம் : பொது

**காத லாகிக்**
**கசிந்துகண் ணீர்மல்கி**
**ஓது வார்தமை**
**நன்னெறிக் குய்ப்பது**
**வேதம் நான்கினும்**
**மெய்ப்பொரு ளாவது**
**நாதன் நாமம்**
**நமச்சி வாயவே. 1**

## 4.நான்காம்-திருமுறை:

அருளியவர் : திருநாவுக்கரசர் பண் : காந்தாரபஞ்சமம் நாடு :பொது தலம் : பொது

**சொற்றுணை வேதியன்**
**சோதி வானவன்**
**பொற்றுணைத் திருந்தடி**
**பொருந்தக் கைதொழக்**
**கற்றுணைப் பூட்டியோர்**
**கடலிற் பாய்ச்சினும்**
**நற்றுணை யாவது**
**நமச்சி வாயவே. 1**

### 5.ஐந்தாம்-திருமுறை:

அருளியவர் : திருநாவுக்கரசர் பண் : திருக்குறுந்தொகை நாடு :சோழநாடு காவிரி வடகரை தலம் : கோயில் (சிதம்பரம், தில்லை)

அன்னம் பாலிக்குந்
தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு
மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு
மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு
மோவிப் பிறவியே. 1

### 6.ஆறாம்-திருமுறை:

அருளியவர் : திருநாவுக்கரசர் பண் : திருத்தாண்டகம் நாடு :பாண்டியநாடு தலம் :ஆலவாய் (மதுரை)

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் றன்னைத்
தூயானைத் தூவெள்ளை ஏற்றான் றன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றுஞ்
சேயானைத் தென்கூடற் றிருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 8

## 7.ஏழாம்-திருமுறை:

அருளியவர் : சுந்தரர் பண் : தக்கேசி நாடு :சோழநாடு காவிரித் தென்கரை தலம் : ஆரூர்

பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானைப்
போக முந்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறி வொண்ணா
எம்மா னையெளி வந்தபி ரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
ஆரூரானை மறக்கலு மாமே. 1

## 8. எட்டாம்-திருமுறை:

அருளியவர் :மாணிக்கவாசகர் நாடு :பாண்டியநாடு தலம் :திருப்பெருந்துறை (ஆவுடையார்கோயில்)

வேண்டத்தக்க தறிவோய்நீ வேண்ட
முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ வேண்டி
என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய் யானும்
அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும்
உன்றன் விருப்பன்றே. 6

9.ஒன்பதாம்-திருமுறை:-

## திருவிசைப்பா

அருளியவர் : திருமாளிகைத்தேவர் பண் : பஞ்சமம் நாடு :சோழநாடு காவிரி வடகரை தலம் :கோயில் (சிதம்பரம், தில்லை)

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே !
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே !
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே. 1

## திருப்பல்லாண்டு

அருளியவர் : சேந்தனார் பண் : பஞ்சமம் நாடு :சோழநாடு காவிரி வடகரை தலம் : கோயில் (சிதம்பரம், தில்லை)

மன்னுக தில்லை வளர்கநம்
பத்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே. 1

10.பத்தாம்-திருமுறை:

அருளியவர் : திருமூலர்

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே. 8

## 11.பதினொன்றாம்-திருமுறை:

அருளியவர் : காரைக்கால் அம்மையார் - அற்புதத் திருவந்தாதி

**அருளே உலகெலாம் ஆள்விப்ப தீசன்**
**அருளே பிறப்பறுப்ப தானால் - அருளாலே**
**மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்**
**எப்பொருளு மாவ தெனக்கு 9**

## 12.பன்னிரண்டாம் திருமுறை:

சேக்கிழார் பெருமான் அருளிய - திருத்தொண்டர் புராணம்

**இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டு கின்றார்**
**பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல் உன்னை என்றும்**
**மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி**
**அறவா நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க என்றார் ..**

**திருச்சிற்றம்பலம் .**



## அபிராமி அந்தாதி

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியிலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே!

- அபிராமி பட்டர்

## திருப்புகழ்

ஏறுமயிலேறி விளையாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடியார்கள் வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே..

-அருணகிரிநாதர்

## பிழைபொறுத்தல் பதிகம்

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும்
நின் அஞ்செழுத்தைச் சொல்லாப் பிழையும்
துதியாப் பிழையும் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்து அருள்வாய் கச்சி ஏகம்பனே..

-பட்டினத்தார்...

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம். - கச்சியப்ப சிவாச்சாரியார்